[18th March 1954

Sri M. PALANIYANDI :—" சென்னை மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும் மூன்று சர்க்கரை ஆலைகளில் யார் நிர்வாகஸ்தர்கள், யார் லைசென்ஸ் பெற்றவர்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா ? "

The Hon. Dr. U. KRISHNA RAO :—" I am only giving the places where it is supposed to work. I would like to have notice as the hon. Member wants the names of the proprietors."

Sri N. K. PALANISAMI :—" சில சர்க்கரை ஆலைகள் மூடப்பட்டன என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். மத்திய சர்க்கார் சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு குறிப்பிட்ட லாபத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். அதற்குமேல் லாபம் வந்தும்கூட ஏன் ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதைக் கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ? "

The Hon. Dr. U. KRISHNA RAO :—" Sir, the Mylapatti Factory has stopped working because a new machinery with a larger capacity of 400 tons is being installed. The Pugalur Factory stopped working in February while the Pandiarajan Factory stopped in April—both for want of sugarcane supply from the growers, who diverted their cane to jaggery production."

Sri P. CHELLATHURAI :—" May I know whether the sugar factories were liquidated voluntarily by the management or owing to labour trouble? "

The Hon. Dr. U. KRISHNA RAO :—" No factory was liquidated. Only two or three stopped working because, in one, new machinery was being put and, in the other two cases, sugar cane was not available."

Sri S. JAYARAMA REDDIAR :—" இந்த மாகாணத்தில் ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் சர்க்கரை ஆலைகள் நன்றாக வேலை செய்யவில்லை என்ற காரணத்தினாலும் இப்பொழுது லைசென்சுகள் வாங்கியிருக்கும் முதலாளிகளுக்கும் அநேகமாக share capital சேருவதற்கு சந்தர்ப்பம் இல்லாமலிருப்பதாலும் சர்க்கரை 51 சத விகிதம் share எடுத்துக்கொண்டு வேறு யாருக்காவது அதாவது இன்னும் போதுமான வசதியுள்ளவர்களுக்கு இந்த லைசென்சுகளைக் கொடுத்து நமது மாகாணத்தில் சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்துவதற்கு சர்க்காரிடம் ஏதாவது யோசனை இருக்கிறதா ? "

The Hon. Dr. U. KRISHNA RAO :—" Sir, sugar manufacture has been left to private enterprise. If anybody wants a loan, he is at liberty to apply to the Investition Corporation, who, after receiving proper security, will consider his request. The policy of the Government at the present moment is not to advance or take shares in any private concern."

Sri A. GOVINDASWAMY NAYAGAR :—" வெள்ளைக்காரர்களை விரட்டிய காங்கிரஸ்காரர்களின் ஆட்சி காலத்தில் இன்னும் வெள்ளைக்காரர்கள் ஆதிக்கத்தில் எத்தனை ஆலைகள் இருக்கின்றன ? நெல்லிக்குப்பத்திலிருக்கின்ற Parry & Co. ஆலையில் விவசாயிகளுக்கு கரும்பின் (sugarcane) விலை இரண்டு முறையாகக் கொடுக்கப்படுகிறது. கூலிக்காரர்களுக்கும் போனஸ் போன்றவைகள் கொடுக்கப்படுவதில்லை. ஆகையால் அந்த ஆலையைத் தேசீய மயமாக்க சர்க்கார் முன் வருவார்களா ? "